# உள்ளடங்கல் கல்வியை நோக்கிய பயணத்தில் ஒரு பாடசாலை



கடற்கரை நகர்ப்புற சூழலில் பாடசாலையை சுற்றி அமைக்கப்பட்டுள்ள உயரமான சுவர்களினால் அதன் பரபரப்பான இரைச்சலை உலகமே காணாது. ஐநூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் இங்கு கல்வி பயின்று வந்தாலும் காலை வேளையில் பாடசாலை சூழல் மிகவும் அமைதியாக காணப்படும்.

வேலைப்பழு காரணமாக பிரதி அதிபருடனான சந்திப்பினை சற்று ஒத்திவைத்தோம். ஆனால், அவருடைய அனுமதியைப் பெற்றுக்கொண்டு விசேட கல்விப் பிரிவிற்குச் சென்றோம். அங்கு எட்டு மாணவர்கள் இருந்தனர். அவர்களுக்காக பல்வேறு செயற்பாடுகளை ஆசிரியர் ஒழுங்கமைத்துக்கொண்டிருந்தார். அங்குள்ள பிள்ளைகள், மனநலிவு நோய் ([illegible]), மிகையியக்க குறைபாடு ([illegible]), மன இறுக்கம், அறிவுசார் குறைபாடுகள் மற்றும் பல குறைபாடுகளுடன் காணப்பட்டனர். பல்வேறு வேலைப்பழுவிற்கு மத்தியில், ஆசிரியர் எம்மை புன்முறுவலுடன் வரவேற்றார்.

“நான் இந்தப் பாடசாலையில் 11 வருடங்களாக கற்பிக்கின்றேன். இதற்கு முன்னர் இரண்டு பாடசாலைகளில் கல்வி கற்றேன்.

ஆசிரியர் பணியில், விசேடக் கல்விப் பிரிவு ஆசிரியாக 25 வருடங்களாக கடமையாற்றுகின்றேன். மஹரகம ஆசிரியர் கலாசாலையிலேயே நான் பயிற்சி பெற்றேன். இந்தப் பாடசாலையில், விசேட கல்விப் பிரிவினை நான்தான் ஆரம்பித்தேன். இங்குள்ள விசேட கல்விப் பிரிவின் ஒரே ஆசிரியராக நான் ஆரம்பத்தில் இருந்து கடமையாற்றி வருகின்றேன்.

அவர் தமது மாணவர்களின் நிலைக்கு ஏற்ற செயற்பாடுகளை அவர்களுக்காக ஒழுங்கமைத்திருந்தார். தமது ஆடைகளுக்கான பொத்தான்களை போடுவது, அவற்றை கழற்றுவது, சட்டைகளை தாமாகவே அணிந்துகொள்ளுதல், எளிதான தையல் வேலைகள், படங்களை வகைப்படுத்தி பிரித்தல், கடிதம் எழுதுதல் போன்ற செயற்பாடுகளை அவர்கள் பயின்றனர். ஒவ்வொரு மாணவரதும் அறிவாற்றலுக்கு ஏற்றவாறு அவர்களுக்கான செயற்பாடுகள் தனித்தனியாக திட்டமிடப்பட்டிருந்தன. ஒவ்வொரு மாணவரையும் ஆசிரியர் தனித்தனியாக கண்காணித்தார். இந்தப் பணி கடினமாக இருந்தாலும், மனதில் மகிழ்ச்சியுடனும் நிம்மதியுடனும் அவர் இவற்றை செய்தார்.

விசேட கல்விப் பிரிவில் கல்வி பயின்ற நான்கு மாணவர்கள், தற்போது வழமையான வகுப்பறையுடன் இணைக்கப்பட்டுள்ளனர். விசேட கல்விப் பிரிவில் சில தயார்ப்படுத்தல்களை மேற்கொண்ட பின்னர், அவர்கள் தரம் ஒன்றிலிருந்து வழமையான வகுப்பறைகளில் கல்வி கற்கின்றனர். இரண்டு மாணவர்கள் தற்போது தரம் 8இல் கல்விகற்கின்றனர். மற்றுமொரு மாணவர் தரம் 7இல் கல்வி கற்கின்றார். தரம் 6இல் கல்வி பயிலும் பல்வேறு குறைபாடுகளைக் கொண்ட மாணவர் ஒருவர், சுகயீனம் காரணமாக இந்நாட்களில் பாடசாலைக்கு சமூகமளிப்பதில்லை. அறிவு ரீதியாக அந்த மாணவர் சிறந்த முன்னேற்றத்தை வெளிப்படுத்தியுள்ளார். தரம் 7இல் கல்விகற்று வந்த மாணவி ஒருவர் தற்போது பாடசாலைக்குச் செல்வதில்லை. அவருக்கு இப்போது 18 வயது. தொழிற்கல்வியை கற்பதற்கு அவரை அனுப்பவுள்ளதாக அவரது தாயார் குறிப்பிட்டார்.

விசேட கல்விப் பிரிவானது, எழுதுதல், வாசித்தல், செவிமடுத்தல் போன்ற திறன்களுக்கு அப்பால், வாழ்க்கைத் திறன்களையும் அடிப்படை தொழிற்பயிற்சிகளையும் மாணவர்களுக்கு வழங்குகின்றது.

"விரல்களில் காயங்களை ஏற்படுத்திக்கொள்ளாமல் காய்கறிகளை கவனமாக நறுக்கும் முறை, கண்ணீர் வராமல் வெங்காயத்தை உரித்து நறுக்குதல், சமைக்கும் முறை, கேஸ் அடுப்பினை பற்றவைக்கும் முறை, எரிகாயங்களுக்கு உள்ளாகாமல் தீயினைக் கையாளுதல் போன்ற விடயங்களை நான் பாடசாலையில் மாணவர்களுக்கு கற்பிக்கின்றேன். உணவில் உப்பு மற்றும் புளிப்பு சுவைகளை உரிய அளவில் பயன்படுத்தும் முறை பற்றியும் அவர்களுக்கு பயிற்சியளிக்கப்படுகின்றது. இந்த வகுப்பறையில் கல்விகற்ற பிள்ளைகள் தமது சமையலின் போது உதவுவதாக அவர்களது தாய்மார் என்னிடம் கூறியுள்ளனர். அவர்களது வேலைகளை தனியாக செய்துகொள்வதற்கு நாம் பயிற்சியளிக்கின்றோம். துணிகளை மடித்து, ஒழுங்காக வைப்பது தொடர்பாகவும் நான் பயிற்சிகளை வழங்குகின்றேம். அத்தோடு, தையல் கலை பற்றியும் பயிற்சி வழங்குகின்றேன். அதில், ஊசியை பயன்படுத்தும் விதம், வடிவங்களை அமைத்தல் என்பனவற்றையும் பயிற்றுவிக்கின்றேன். இந்த அடிப்படைப் பயிற்சிகள் நீண்ட காலத்திற்கு உதவும்"

விசேட கல்விப் பிரிவிலிருந்து வெளிச்சென்ற மாணவர்கள், தொழிற்பயிற்சியை கற்றுக்கொள்ள ஆரம்பித்துள்ளதாகவும் ஆசிரியர் குறிப்பிட்டார்.

உள்ளடங்கல் கல்விக்குள், ஒவ்வொரு மாணவரினதும் தனித்துவத்தைக் கருத்திற்கொண்டு அவர்கள் ஒவ்வொருவர் மீதும் தனித்தனியாக கவனஞ்செலுத்த வேண்டும் என்றும் ஆசிரியர் வலியுறுத்தினார்.

"படங்களை வரையும்போதும், இவ்வாறு நடக்கும். அதாவது, சிலருக்கு வரைய முடியும். சிலருக்கு வரைந்து வர்ணம் தீட்டவும் முடியும். வர்ணம் தீட்டுவதற்கு, ஆசிரியர் தமக்கு படங்களை

வரைந்து தரவேண்டும் என சில மாணவர்கள் எதிர்பார்க்கின்றனர். அனைவருக்கும் பொதுவான வகையில் கற்பிக்க முடியாது. ஒவ்வொரு மாணவருக்கும் தனித்தனியாக பாடங்களை திட்டமிட்டு அவற்றை செயற்படுத்த வேண்டும்

விசேட கல்விப் பிரிவு ஆசியர்களுக்கான ஏராளமான பயிற்சி வாய்ப்புகளை மாகாண கல்வித் திணைக்களம் வழங்கியுள்ளதாக ஆசிரியர் குறிப்பிட்டார்.

"பயிற்சிக்கு அப்பால், எமது அனுபவமும் படைப்பாற்றலும் மிகவும் முக்கியமானது. விசேட கல்விப் பிரிவில் தகுந்த தயார்ப்படுத்தல் காலத்திற்குப் பின்னர், சாத்தியமான ஒவ்வொரு மாணவரும் வழக்கமான வகுப்புகளுடன் ஒருங்கிணைக்கப்படுவர். வழக்கமான வகுப்புகளில் சேர்க்கப்பட்ட பின்னரும், அந்த வகுப்புகளில் உள்ள ஆசிரியர்கள் அவர்கள் மீது விசேட கவனம் செலுத்துவர். ஒரு விசேட கல்வி ஆசிரியர் என்ற வகையில், நானும் நீண்ட காலமாக அந்த மாணவர்கள் மீது கவனம் செலுத்துகிறேன். இதற்கு ஆசிரியர்கள் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர். உள்ளடங்கல் கல்வி குறித்து அவர்களுக்கும் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது"

விளையாட்டு நிகழ்வுகள், பல்வேறு கலை நிகழ்வுகள், காலைநேர ஒன்றுகூடல் போன்றவற்றில் ஒருங்கிணைக்கப்பட்ட மாணவர்கள் குறித்து பாடசாலை எப்போதும் விசேட கவனம் செலுத்தும். பாடசாலை அவர்களுக்கு சாத்தியமான சகல வாய்ப்புகளையும் ஏற்படுத்திக் கொடுக்கும். உள்ளடங்கல் கல்வியை ஏற்றுக்கொள்ளும் வகையில் ஏனைய ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்களின் மனப்பான்மையை மாற்றியமைப்பதில் பாடசாலை நிர்வாகம் சிறந்த பங்களிப்பை வழங்கியுள்ளது. தற்போது, முழு பாடசாலையும் உள்ளடங்கல் கல்விக்கு மிகவும் பொருத்தமான கட்டமைப்பைக் கொண்டுள்ளது.

இயலாமையுடைய மாணவர்களை நிபுணத்துவம் மிக்க ஆசிரியர்கள் அல்லது உதவியாளர்களின் ஆதரவுடன், வழக்கமான வகுப்பறைகளில் இணைப்பதை நோக்கமாகக் கொண்ட அணுகுமுறையே ஒருங்கிணைந்த கல்வியாகும். இயலாமை

உடைய மாணவர்களுக்கும் ஏனைய சாதாரணமான மாணவர்களுக்கும் சமமான கல்வி அனுபவங்களை பெற்றுக் கொடுப்பதே ஒருங்கிணைந்த கல்வியின் குறிக்கோளாகும்.

உள்ளடங்கல் கல்வி என்பது மிகவும் விரிவான அணுகுமுறையாகும், இது மாணவர்களின் திறன்கள் அல்லது குறைபாடுகளைப் பொருட்படுத்தாமல் அவர்களை வரவேற்று ஆதரவளிக்கும் பாடசாலை சூழலை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. தனிப்பட்ட தேவைகளைப் பொருட்படுத்தாமல், அனைத்து மாணவர்களும் பாடசாலையில் பங்கேற்று வெற்றிபெறும் வாய்ப்பைப் பெறுவதை உறுதி செய்வதே உள்ளடங்கல் கல்வியின் குறிக்கோளாகும்.

விசேட கல்விப் பிரிவின் பல வருட வளர்ச்சிக்குப் பின்னர், செனுரி உள்ளடங்கல் கல்வி ஊடாக தரம் ஒன்றிலிருந்து உயர்ந்தார். அவள் தற்போது தரம் 7இல் கல்வி கற்று வருகிறார். அறிவுசார் இயலாமை உடைய 14 வயது மாணவியான செனுரி, விளையாட்டு மற்றும் நடனம் ஆகியவற்றில் சிறந்து விளங்குகின்றார். அவர் விசேட கல்விப் பிரிவு மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளில் பாடசாலையை பிரதிநிதித்துவப்படுத்தி ஓட்டப் போட்டி உள்ளிட்ட தடகள போட்டிகளில் மாகாண மட்டத்தில் சான்றிதழ்களை வென்றுள்ளார். பாடசாலை மட்ட விளையாட்டுப் போட்டிகளிலும் கலந்துகொள்கின்றார். "வகுப்பில் உள்ள எல்லா நண்பர்களையும் விட என்னால் வேகமாக ஓட முடியும்" என அவர் கூறினார்.

"எனது மகளின் வளர்ச்சிக்கு பாடசாலை வழங்கும் ஆதரவானது மிகவும் மகத்தானது" என செனுரியின் தாய் கூறினார். “மகளுக்கு ஞாபக மறதி பிரச்சினை இருக்கிறது. இருப்பினும், அவள் ஓடவும், குதிக்கவும், விளையாடவும், நடனமாடவும் விரும்புகிறாள். பாடசாலை அவளுக்கு அதற்கான வாய்ப்பை வழங்குகின்றது. தரம் ஐந்து வரை ஒரே ஆசிரியையிடமே கல்வி கற்ற எனது மகள், காலத்திற்கு காலம் ஆசிரியர்களை மாற்றும் புதிய முறைக்கு

தற்போது பழகி வருகிறாள். அவள் மந்தமான செயற்பாட்டை கொண்டிருப்பினும், வகுப்பிலுள்ள சக நண்பர்களுடன் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றாள்"

தரம் எட்டில் கல்வி கற்கும் 16 வயதுடைய 'மனுத்' என்ற மாணவனை நாம் சந்தித்தோம். மிகையியக்க குறைபாடு (hyperactivity) கொண்ட அவர், இன்று ஒருங்கிணைந்த கல்வி மூலம் பாடசாலையில் அதிகபட்ச பலன்களை பெற்ற மாணவராக உள்ளார். அவர் சாதாரணமான மாணவர்களுக்கு நிகராக செயற்படுவதை நாம் கவனித்தோம்.

உள்ளடங்கல் கல்வியானது, இயலாமை உடைய மாணவர்களின் சுதந்திரத்தையும் தன்னம்பிக்கையையும் வளர்க்க உதவுகிறது என பாடசாலை அதிபர் குறிப்பிட்டார். "இது அவர்களது சமூக திறன்களை வளர்க்கவும் நண்பர்களை உருவாக்கவும் உதவுகின்றது. பிறரிடம் அனுதாபம் காட்டல், பிறரை புரிந்துகொள்ளல் மற்றும் மனித அனுபவத்தின் பன்முகத்தன்மையைப் பாராட்டுதல் போன்ற செயற்பாடுகளுக்கு உள்ளடங்கல் கல்வி அனைத்து மாணவர்களுக்கும் உதவும்" என அவர் குறிப்பிட்டார். விசேட கல்வி ஆசிரியராக பாடசாலையில் தனது வகிபாகம் மற்றும் பாடசாலையை உள்ளடங்கல் கல்வியை நோக்கி பாடசாலையை வழிநடத்துவது பற்றிய தனது கருத்துக்களைக்களை பெருமையுடன் முன்வைத்தார்.

உள்ளடங்கல் கல்வி வெற்றிகரமானதாக அமைவதற்கு, பாடசாலைகளும் ஆசிரியர்களும் தமது கற்பித்தல் முறைகளை மாற்றியமைக்க தயாராக இருக்க வேண்டும். இயலாமை உள்ள மாணவர்களுக்கு கூடுதல் ஆதரவு தேவை. எனினும், உள்ளடங்கல் கல்வியின் நன்மைகள் அதன் சவால்களை விட முக்கியத்துவத்தில் மேம்பட்டதாக உள்ளன. அது ஒரு நியாயமான மற்றும் பயனுள்ள கல்வி முறையாகும். சகல மாணவர்களும் தமது முழுமையான திறனை அடையும் வாய்ப்பை உறுதி செய்வதற்கான சிறந்த வழியாக உள்ளடங்கல் கல்வி காணப்படுகிறது.